செ.வெ.எண்: 135/2018 நாள்:21.02.2018

## ஓகி புயலால் பாதிக்கப்பட்ட மீனவ குடும்பங்களுக்கு ரூ.34.85 கோடி மதிப்பில் நிவாரண உதவித்தொகைகள் மற்றும் நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டது - மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சஜ்ஜன்சிங் ரா.சவான் இ.ஆ.ப., அவர்கள் தகவல்

கன்னியாகுமரி மாவட்டத்தில் ஓகி புயலால் பாதிக்கப்பட்ட மீனவ குடும்பங்களுக்கு ரூ.34.85 கோடி மதிப்பில் நிவாரண உதவித்தொகைகள் மற்றும் நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டுள்ளதாக மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சஜ்ஜன்சிங் ரா.சவான் இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

இது குறித்து மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தெரிவித்ததாவது:-

கன்னியாகுமரி மாவட்டத்தில் கடந்த 29.11.2017 அன்று ஓகி புயலால் கடுமையான சூறைக்காற்றுடன் கூடிய கனமழை பெய்ததன் காரணமாக கன்னியாகுமரி மாவட்டத்தில் இதுவரை கண்டிராத வகையில் விவசாய நிலங்கள், வீடுகள், சாலைகள், மின் கம்பங்கள் கடும் சேதங்கள் ஏற்பட்டு, பொதுமக்கள் பெருமளவில் பாதிக்கப்பட்டனர். குறிப்பாக, மீனவ கிராமங்களான நீரோடி, மார்த்தாண்டன்துறை, வள்ளவிளை, இரவிபுத்தன்துறை, சின்னதுறை, தூத்தூர், பூத்துறை மற்றும் இரயுமன்புத்தன்துறை போன்ற பகுதிகள் அதிகளவில் பாதிக்கப்பட்டது. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஓகி புயலால் ஏற்பட்ட பாதிப்புகள் மீதான மீட்பு நடவடிக்கைகளை போர்கால அடிப்படையில் மேற்கொள்ள உத்தரவிட்டார்கள்.

நீரோடி, மார்த்தாண்டன்துறை, வள்ளவிளை, இரவிபுத்தன்துறை, சின்னதுறை, தூத்தூர், பூத்துறை மற்றும் இரயுமன்புத்தன்துறை ஆகிய பகுதிகளைச் சேர்ந்த 3161 மீனவர்கள் கடந்த 29.11.2017 அன்று மீன்பிடித் தொழிலுக்கு சென்று கரை திரும்பவில்லை. அதனடிப்படையில் காணாமல் போன மீனவர்களை மீனவ கப்பற்படை, இந்திய கடலோர படை, சிறு விமானம் மற்றும் மீன்வளத்துறை போன்ற மீட்புகுழுவினரால் நடுகடல்களில் தேடும் பணிகள் நடைபெற்றது. சில தீவுகளில் கரை ஒதுங்கிய மீனவர்களையும், அவர்களது படகுகளையும் பத்திரமாக மீட்டு, பாதுகாப்பாக தமிழகம் அழைத்து வரப்பட்டனர்.

கன்னியாகுமரி மாவட்டத்தில் ஓகி புயலின் எதிரொலியாக 29.11.2017 முற்பகல் 12.30 மணியளவில் ஓகி புயல் தொடர்பாக பெறப்பட்ட "வானிலை" ஆய்வு மையத்தின் தகவல்களை மீனவ கிராம மக்களுக்கு உடனடியாக அளித்து எச்சரிக்கை நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. நீரோடி, மார்த்தாண்டன்துறை, வள்ளவிளை, இரவிபுத்தன்துறை, சின்னதுறை, தூத்தூர், பூத்துறை மற்றும் இரயுமன்புத்தன்துறை ஆகிய பகுதிகளைச் சேர்ந்த 3161 மீனவர்கள் கடந்த 29.11.2017 முன்பாக கடலில் மீன்பிடித் தொழிலுக்கு சென்று கரை திரும்பவில்லை என்ற தகவலின் அடிப்படையில் கரை திரும்பாத மீனவர்கள் மீட்பு மற்றும் நிவாரண பணிகள் தொடர்பான நடவடிக்கைகளுக்காக 24 மணிநேரம் செயல்படும் கட்டுப்பாட்டு அறை மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலகத்திலும், கிராத்தூர் கிராமத்தில், கலிலி, தூத்தூர் மறைமாவட்டம், கொல்லங்கோடு அஞ்சல்,

அலுவலகத்திலும், மீன்பிடி படகுகள், மீனவர்களின் விவரங்களை உடனுக்குடன் கடல்சார் மீட்பு ஒருங்கிணைப்பு மையம் (Maritime Rescue Coordination Center) மற்றும் இந்திய கடலோர காவல்படை (ICG) வாயிலாக தகவல்கள் பதிய கட்டுப்பாட்டு அறையும் அமைக்கப்பட்டு தேடுதல் மற்றும் காப்பாற்றும் பணிகள் மேற்கொள்ளப்பட்டது.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் மாண்புமிகு மின்சாரத்துறை அமைச்சர், மீன்வளத்துறை அமைச்சர் மற்றும் வருவாய்துறை அமைச்சர் ஆகியோரை கன்னியாகுமரி மாவட்டத்திற்கு உடனடியாக அனுப்பி புயலால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு தேவையான உதவிகள் செய்ய ஆணையிட்டார். அதன்படி, மாண்புமிகு மின்சாரத்துறை அமைச்சர், மீன்வளத்துறை மற்றும் வருவாய்துறை அமைச்சர் ஆகியோர் கன்னியாகுமரி மாவட்டத்திற்கு வருகைபுரிந்து மீனவ கிராம மக்களுக்கு ஆறுதல் கூறி அவர்களுக்கு தேவையான நிவாரண உதவிகளை செய்தனர். மேலும், மீனவ மக்களின் கருத்துக்களையும் கேட்டறிந்து, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களிடம் தெரிவித்தனர். பின்னர், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பாரத பிரதமர் அவர்களிடம் உடனடியாக தொடர்பு கொண்டு கரை திரும்பாத மீனவர்களை காப்பாற்றுவதற்கு இந்திய கடலோர காவல்படை மற்றும் கடற்படையின் மூலம் கப்பல்கள், விமானங்கள் ஹெலிகாப்டர்களை கொண்டு தேடுதல் பணி மேற்கொள்ள கேட்டுக்கொண்டார்.

மேலும், மத்திய உள்துறை அமைச்சரிடம் தொடர்ந்து தேடுதல் பணியை விரைந்து செய்யவும் வலியுறுத்தினார். இதுகுறித்து மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தலைமை செயலகத்தில் இருமுறை கடலோர காவல்படை, கப்பற்படை, விமானப்படை அதிகாரிகளுடன் ஆலோனை கூட்டம் நடத்தி மீனவர்களை தேடும் பணியியை துரிதமாகவும், விரைந்து செயல்பட வேண்டுமெனவும் அறிவுறுத்தினார்.

முன்னதாக, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஊரக வளர்ச்சித்துறை மற்றும் உள்ளாட்சித்துறை கூடுதல் தலைமைச் செயலரை தலைவராகவும், தகவல் தொழில்நுட்பத்துறை முதன்மை செயலாளரை கண்காணிப்பு அலுவலராக கொண்டும் - ஊரக வளர்ச்சித்துறை தொழில்துறை முதன்மைச் செயலாளர், வருவாய்த்துறை ஆணையர், வேளாண்மைத்துறை முதன்மை செயலர், வேலைவாய்ப்பு பயிற்சித்துறை இயக்குநர், மீன்வளத்துறை இயக்குநர், மீன்வளத்துறை கூடுதல் இயக்குநர், ஊரக வளர்ச்சித்துறை இயக்குநர் ஆகிய ஐ.ஏ.எஸ். அதிகாரிகள் கொண்ட குழுவினை உடனடியாக கன்னியாகுமரி மாவட்டத்திற்கு அனுப்பி, முகாமிட்டு நிவாரண பணிளை துரிதமாக மேற்கொள்ள ஆணையிட்டார்கள்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் கரை திரும்பாத மீனவர்களின் குடும்பத்திற்கு உடனடி நிவாரணமாக தலா ரூ.2500/- வழங்க ஆணையிட்டார். அதன்படி, உடனடியாக 30756 மீனவர்களின் குடும்பத்திற்கு ரூ.7,68,90,000/- மதிப்பில் நிவாரண தொகை வழங்கப்பட்டது.

பின்னர், 12.12.2017 அன்று குமரி மாவட்டத்தை சேர்ந்த மீனவ குடும்பங்களுக்கு மீன்பிடி குறைந்த கால மீன்பிடி நிவாரணம் திட்டத்தின் கீழ் 28,643 மீனவ குடும்பங்களுக்கு, தலா ரூ.5000/- வீதம் ரூ.14,32,15,000/- நிவாரண தொகை அவர்களது வங்கி கணக்களுக்கு நேரடியாக ஈடுசெய்யப்பட்டது. இந்நிவாரண தொகையை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள்

கன்னியாகுமரி மாவட்டம், தூத்தூர் புனித யூதா கல்லூரியில் 12.12.2017 அன்று மீனவ குடும்பங்களை சந்தித்த பின்னர், ரூ.2,500/- ஓகிபுயல் நிவாரணத் தொகையை ரூ.5000/-மாக உயர்த்தி வழங்கப்படும் என அறிவித்தார். அதன்படி 30756 மீனவ குடும்பங்களுக்கு 18.12.2017 அன்று கூடுதலாக ரூ.2,500/- வீதம், ரூ.7,68,90,000/- நிவாரணத்தொகை நேரடியாக ஈடுசெய்யப்பட்டது. மேலும் கடலில் காணாமல் போன 188 மீனவர்களின் குடும்பங்களுக்கு 21.12.2017 அன்றும் 46 மீனவர்களின் குடும்பங்களுக்கு 02.01.2018 அன்றும் சிறப்பு நிவாரணமாக ரூ.5000/- வீதம் மொத்தம் ரூ.11,70,000/- பயனாளிகளின் வங்கி கணக்கில் இருசால் செய்யப்பட்டது. ஆகமொத்தம், ஓகி புயல் நிவாரணம் மற்றும் மீன்பிடி குறைந்த கால சிறப்பு நிவாரணம் ஆகிய திட்டங்களின்கீழ் மீனவ குடும்பங்களுக்கு ரூ.29,81,65,000/- மதிப்பில் நிவாரணத்தொகை வழங்கப்பட்டது.

அதனை தொடர்ந்து ஓகி புயலினால் கடலில் தத்தளித்து காயங்களுடன் கரை திரும்பிய 20 மீனவர்களுக்கு மருத்துவ சிகிச்சை மேற்கொள்ள தலா ரூ.50,000/- வீதம் ரூ.10 இலட்சம் மதிப்பில் நிவாரண தொகையும் வழங்கப்பட்டது.

குஜராத், கர்நாடகா, மகாராஷ்ட்ரா, கேரளா மற்றும் இலட்சத்தீவுகளில், புயல் காற்றின் வேகம் காரணமாக தற்காலிகமாக கரை ஒதுங்கிய 292 படகுகள் மற்றும் 3211 மீனவர்கள் பாதுகாப்பாக கரை சேர்ந்த விவரங்கள் படிப்படியாக சேகரிக்கப்பட்டது. 2,711 மீனவர்களின் பெயர்கள், அவர்களை ஏற்றி சென்ற 292 மீன்பிடி படகுகளின் பெயர்கள் அவர்கள் கரைசேர்ந்துள்ள பிற மாநிலங்கள் விவரங்கள் அடங்கிய இரு பட்டியல்கள் 09.12.2017 மற்றும் 10.12.2017 தேதிய தினத்தந்தி நாளிதழ்களில் வெளியிடப்பட்டு, இந்த விவரங்கள் சம்மந்தப்பட்ட கிராமங்களுக்கு அனுப்பப்பட்டு, பாதுகாப்பாக உள்ள மீனவர்கள் மற்றும் மீன்பிடி படகுகள் விவரங்களை பொதுமக்கள் அறிந்து கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டது.

சம்பந்தப்பட்ட மாநிலங்களுக்கு 03.12.2017 முதல் தமிழ்நாடு மீன்வளத்துறை உயர் அலுவலர்கள் சிறப்பு பணிக்கு அனுப்பப்பட்டு, சம்பந்தப்பட்ட மாநிலங்களில் தொடர்புடைய மீன்வளத்துறை மற்றும் காவல்துறை அலுவலர்களின் ஒத்துழைப்புடன், ஒருங்கிணைப்பு பணிகள் மேற்கொண்டு, 07.12.2017 அன்று மேற்படி 4 மாநிலங்கள் மற்றும் இலட்சத்தீவு பகுதிகளுக்கு 5 மூத்த இந்திய ஆட்சிப்பணி அலுவலர்கள் " அனுப்பி வைக்கப்பட்டு " மேற்படி இடங்களில் கரை சேர்ந்துள்ள மீனவர்கள் மற்றும் மீன்பிடி படகுகளை " திரும்ப " தமிழகத்திற்கு அழைத்து வருவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது.

மேலும், தமிழக அரசு குஜராத், கர்நாடகா, மகாராஷ்ட்ரா, கேரளா மற்றும் இலட்சத்தீவுகளில் தமிழக அரசு மேற்படி மீனவர்களுக்கு தமிழகம் திரும்பி வருவதற்கு " உணவு " வசதிக்காக தலா ரூ.2000/- வீதம் 1574 மீனவர்களுக்கு ரூ.31,48,000/- மதிப்பில் நிதியுதவியும், குஜராத், மற்றும் மகாராஷ்ட்ரா மாநிலங்களில் உள்ள படகுகள் திரும்பி வர தலா 1000 லிட்டர் டீசல் எரிபொருள் 105 படகுகளுக்கு 103.25 கி.லி, கர்நாடகா, இலட்சத்தீவு பகுதியில் இருந்து திரும்பி வருவதற்கு தலா 750 லிட்டர் டீசல் எரிபொருள் 112 படகுகளுக்கு 84 கி.லி ஆக மொத்தம் 217 படகுகளுக்கு 187.25 கி.லி டீசல் எரிபொருள் வழங்கப்பட்டு " படகுகள் தமிழகம் " திரும்புவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டது.

ஒகி புயலினால் மரணமடைந்த மீனவர்களின் குடும்பத்தினருக்கு 12.12.2017 அன்று மாண்புமிகு முதலமைச்சரின் நிவாரண நிதியிலிருந்து ரூ.10 இலட்சம் 2 மீனவர்களுக்கு வழங்கப்பட்டது. பின்னர், மீனவர் சமுதாயத்தினர் ரூ.10 இலட்சத்தினை ரூ.20 இலட்சமாக உயர்த்தி வழங்கிட கோரியதை தொடர்ந்து மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் கன்னியாகுமரி மாவட்டம், தூத்தூர் புனித யூதா கல்லூரியில் 12.12.2017 அன்று மீனவ குடும்பங்களை சந்தித்த பின்னர், ஒகி புயலினால் மரணமடைந்த மீனவர்களின் குடும்பத்தினருக்கு வழங்கிய நிவாரண நிதி ரூ.10 இலட்சத்திலிருந்து, ரூ.20 இலட்சமாக உயர்த்தி வழங்கப்படும் என்றும், ஒகி புயலினால் மரணமடைந்த மீனவர்களின் குடும்பத்தில் ஒருவருக்கு அரசாங்க வேலை வழங்கப்படும் எனவும் அறிவித்தார்கள். மேலும், ஒகி புயலினால் கரை திரும்பாத மீனவர்களின் மரணத்தை உறுதி செய்ய குழு அமைத்து, அவர்களின் மரணம் உறுதி செய்யப்பட்ட பின்னர் அவர்களின் குடும்பத்தினருக்கும் ரூ.20 இலட்சம் நிவாரண நிதியுதவியும், புயல் வருகின்ற காலத்தில் மீனவர்களை உடனடியாக கரை சேர்த்து காப்பாற்ற ஏதுவாக ஹெலிபேட் தளம் அமைக்க மத்தியரசிடம் ஏற்கனவே கோரிக்கை வைக்கப்பட்டுள்ளது, மீனவ கிராமத்தில் ஹெலிபேட் தளம் அமைக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அறிவித்தார்கள். மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களிடம் 12.12.2017 அன்று மீனவ சமுதாயத்தினர் வானிலை எச்சரிக்கை தொடர்பாக துல்லியமாகவும், உடனடியாகவும் தகவல் பரிமாற்றம் செய்ய நடவடிக்கை மேற்கொள்ள கேட்டுகொண்டதற்கிணங்க உலக வங்கி நிதியுடன் ரூ.62.14 கோடி மதிப்பில் 60 மீ உயரமுள்ள தகவல் தொடர்பு கோபுரங்கள் மற்றும் 25W VHS கருவிகளும், 5W VHS கருவிகளும் வழங்கப்படும் எனவும் அறிவித்தார்கள்.

கன்னியாகுமரி மாவட்டத்தில் ஒகி புயலினால் கடலில் மீன்பிடித் தொழிலுக்கு சென்று கரை திரும்பாத மீனவர்களை தேடும்பணி தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டது. அண்டை மாநிலமான கேரள மாநிலத்திலுள்ள பல்வேறு மருத்துவமனைகள் மற்றும் மருத்துவ கல்லூரிகளில் கரை மீட்கப்பட்ட மற்றும் கரை ஒதுங்கிய சில உடல்கள் பற்றி மாவட்ட நிர்வாகத்திற்கு தகவல் தெரிவிக்கப்பட்டது. அதன்படி, கேரளாவில் பாதுகாக்கப்பாக வைக்கபட்ட உடல்கள் கன்னியாகுமரி மாவட்டத்தைச் சேர்ந்த மீனவர்கள் என்ற சந்தேகத்தின் அடிப்படையில் DNA சோதனை மூலம் உறுதி செய்யப்பட்டு 21 மீனவர்களின் உடல்கள் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் கன்னியாகுமரி மாவட்டம், தூத்தூர் புனித யூதா கல்லூரியில் 12.12.2017 அன்று மீனவ குடும்பங்களை சந்தித்த பின்னர், ஒகி புயலில் சிக்கி காணாமல் போன மீனவர்களின் மரணத்தை உறுதி செய்ய குழு அமைக்கப்பட்டு காணாமல் போன மீனவர்களின் விவரத்தை உறுதி செய்த பின்னர் அவர்களுக்கும் ரூ.20 இலட்சம் வழங்கப்படும் என்று அறிவித்ததின்படி 15.12.2017 அன்று அரசாணை வெளியிட்டது. அதன்படி, ஒகி புயலில் சிக்கி காணாமல் போன மீனவர்களின் மரணத்தை உறுதி செய்ய வட்டாட்சியர் தலைமையில், மீன்துறை ஆய்வாளர், கிராம நிர்வாக அலுவலர் மற்றும் மீனவ கிராமத்தின் பிரதிநிதிகள் மூன்றுபேர் அடங்கிய குழு ஒன்று அமைக்கப்பட்டு, காணாமல் போன மீனவர்களின் விவரத்தை உறுதி செய்யும் கள ஆய்வு பணி மீன்வளத்துறை இயக்குநர் அவர்களால் 16.01.2018 முதல் நீரோடி, வள்ளவிளை, சின்னதுறை, பூத்துறை, மார்த்தாண்டன்துறை, மார்த்தாண்டம் ஆகிய கிராமங்களில் தொடங்கப்பட்டு 19.02.2018

அன்றுடன் முடிவடைந்தது. இக்குழுவின் பரிந்துரையின் பேரில் காணாமல் போன 139 மீனவர்களின் விவரங்கள் அவர்களின் புகைப்படத்துடன் அரசிதழில் வெளியிடப்பட்டது. மேலும், தினசரி நாளிதழ்களிலும் விளம்பரம் செய்யப்பட்டு, காணாமல் போன மீனவர்களின் மரணம் உறுதி செய்யப்பட்டுள்ளது. 139 மீனவர்களின் குடும்பத்தினருக்கும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அறிவித்தபடி ரூ.20 இலட்சம் நிதியுதவி வழங்க அரசுக்கு பரிந்துரை செய்யபட்டுள்ளது.

கன்னியாகுமரி மாவட்டத்தில் ஓகி புயலினால் மரணமடைந்த 23 மீனவர்களுக்கு தலா ரூ.20 இலட்சம் வீதம் மொத்தம் ரூ.4.6 கோடி மதிப்பில் நிவாரணத் தொகையும், ஓகி புயலினால் காயமடைந்த 20 மீனவர்களுக்கு தலா ரூ.50,000 வீதம் மொத்தம் ரூ.10 இலட்சம் நிவாரணத் தொகையும், ஓகி புயலினால் கரை திரும்பாத 234 மீனவர்களின் குடும்பத்திற்கு 21.12.2017 மற்றும் 02.01.2018 அன்று உடனடியாக தலா ரூ.5000/- வீதம் மொத்தம் ரூ.11.70 இலட்சம் மதிப்பில் நிவராரணத் தொகையும், குறைந்த கால மீன்பிடி நிவாரணம் திட்டத்தின் கீழ் 28,643 மீனவ குடும்பங்களுக்கு, தலா ரூ.5,000/- வீதம் மொத்தம் ரூ.14.32 கோடி மதிப்பில் நிவாரணத் தொகையும், வழங்கப்பட்டது. ஓகி புயல் சிறப்பு நிவாரணமாக 30,756 கடல் மீனவ குடும்பங்களுக்கு தலா ரூ.5000/- வீதம் மொத்தம் ரூ.15,37,80,000/- நிவாரணமும் வழங்கப்பட்டது. குஜராத், கர்நாடகா, மகாராஷ்ட்ரா, கேரளா மற்றும் இலட்சத்தீவுகளில் தமிழக அரசு மேற்படி மீனவர்களுக்கு தமிழகம் திரும்பி வருவதற்கு “உணவு” வசதிக்காக தலா ரூ.2000/- வீதம் 1574 மீனவர்களுக்கு ரூ.31,48,000/- மதிப்பில் நிதியுதவியும், குஜராத், மற்றும் மகாராஷ்ட்ரா மாநிலங்களில் உள்ள படகுகள் திரும்பி வர தலா 1000 லிட்டர் டீசல் எரிபொருள் 105 படகுகளுக்கு, 103.25 கி.லி, கர்நாடகா, இலட்சத்தீவு பகுதியில் இருந்து திரும்பி வருவதற்கு தலா 750 லிட்டர் டீசல் எரிபொருள் . 112 படகுகளுக்கு 84 கி.லி ஆக மொத்தம் 217 படகுகளுக்கு 187.25 கி.லி லிட்டர் டீசல் எரிபொருள் வழங்கப்பட்டு படகுகள் " தமிழகம் " திரும்புவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டது.

ஓகி புயலினால் பாதிக்கப்பட்ட நீரோடி, மார்த்தாண்டன்துறை, வள்ளவிளை, இரவிபுத்தன்துறை, சின்னதுறை, தூத்தூர், பூத்துறை மற்றும் இரயுமன்புத்தன்துறை ஆகிய மீனவ கிராமங்களில் சிறப்பு மருத்துவ முகாமும், தூய்மை பணியும் மாவட்ட நிர்வாகத்தின் சார்பாக ஏற்பாடு செய்யப்பட்டது. கன்னியாகுமரி மாவட்டத்தில் ஓகி புயலினால் பெருமளவில் பாதிக்கப்பட்ட மீனவர் சமுதாயத்தினருக்கு இதுவரை ரூ.34.85 கோடி மதிப்பில் நிவாரண உதவித்தொகைகள் மற்றும் நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டுள்ளது. இவ்வாறு மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தெரிவித்துள்ளார்.

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அறிவித்தபடி ரூ.20 இலட்சம் நிதியுதவி பெற்ற குளச்சல் மீனவர் மறைந்த ஜாண் டேவிட்சன் அவர்களின் மனைவி மரிய டெல்பின் அவர்கள் தெரிவித்ததாவது:-**

என் பெயர் மரிய டெல்பின் நான் மறைந்த மீனவர் ஜாண் டேவிட்சன் அவர்களின் மனைவி (வயது 35) எனக்கு 2 ஆண் குழந்தைகள் உள்ளனர். நாங்கள் குளச்சல் கிராமத்தைச் சேர்ந்தவர்கள். எங்களது குடும்பம் மிகவும் ஏழ்மையான குடும்பம். மீன்பிடித் தொழில் தான் எங்களின் பிராதான

தொழில். என் கணவர் இத்தொழிலின் மூலம் வருமானம் ஈட்டி என்னையும், என் பிள்ளைகளையும் காப்பாற்றி வந்தார். என் கணவர் இறந்த பின்னர் எங்கள் வாழ்வாதாரமே பாதிக்கப்பட்டது. எங்கள் எதிர்காலமே கேள்வி குறியாகிவிட்டது. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் வழங்கிய நிவாரண உதவித்தொகையான ரூ.20.00 இலட்சம் எனக்கும், என் பிள்ளைகளுக்கும் மிகவும் பயனுள்ளதாக இருக்கும். நான் இப்பணத்தைக் கொண்டு சுயதொழில் தொடங்கவுள்ளேன். அதன் மூலம் எங்களுக்கு மாத வருமானம் கிடைக்கும். தற்போது சுயதொழில் தொடங்குவதற்கான முன்னேற்பாட்டினை செய்து கொண்டு இருக்கிறேன்.



குளச்சல் மீனவ குடும்பத்தை சார்ந்த பயனாளி திருமதி. மரிய டெல்பின் அவர்கள்

--

மேலும், எனது மகன்களின் எதிர் கால கல்விச் செலவுக்கும் முதலீடு செய்யவுள்ளேன். இந்த நிதியுதவி எங்களுக்கு நல்ல வாழ்வாதாரத்தை கொடுக்கும். இந்த நிதியுதவியை அளித்த மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு என் நன்றிகளை தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அறிவித்தபடி ரூ.20 இலட்சம் நிதியுதவி பெற்ற பூத்துறையைச்சேர்ந்த மறைந்த மீனவர் சர்ஜன் அவர்களின் மனைவி அபிஷா அவர்கள் தெரிவித்ததாவது:-**

என் கணவர் காலஞ்சென்ற சர்ஜன் கடந்த பல வருடங்களாக மீன்பிடித் தொழிலில் ஈடுபட்டு வந்தார். எனது கணவர் சர்ஜன் இறந்த பின் நான் வாழும் நம்பிக்கையையே இழந்துவிட்டேன்.



எங்கள் குடும்பத்தில் அவர் ஒருவர் தான் வருமானம் ஈட்டுபவர். மிகவும் வறுமையில் வாடுகிறோம். எனக்கு வழங்கப்பட்டுள்ள இந்த நிவாரண உதவித்தொகையான ரூ.20 இலட்சம் மிகவும் பயனள்ளதாக இருக்கிறது. நான் இதனைக் கொண்டு சுய தொழில் தொடங்கவுள்ளேன் அந்த வருமானம் எனக்கு போதுமானதாக இருக்கும். மேலும், நான் எனது ஒரு வயது குழந்தையை வளர்க்கவும், இந்நிதயுதவி எங்களின் எதிர்காலத்திற்கும், என்னைபோல் எங்கள் கிராமத்தைச் சேர்ந்தவர்களுக்கும் பேரூதவியாக இருக்கும். தமிழ்நாடு அரசிற்கும், மாவட்ட ஆட்சித் தலைவருக்கும், மீன்வளத்துறை அலுவர்களுக்கும் என் நன்றிகளை தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அறிவித்தபடி ரூ.20 இலட்சம் நிதியுதவி பெற்ற நீரோடியைச் சேர்ந்த மறைந்த மீனவர் ஜாண் பிரிட்டோ அவர்களின் மகள் அவர்கள் தெரிவித்ததாவது:-**

நான் நீரோடி மீனவர் கிராமத்தைச் சார்ந்த காலஞ்சென்ற ஜாண் பிரிட்டோ அவர்களின் மகள் மரிய கிரேட்டி. நான் எனது கணவரை பிரிந்து இரண்டு மகன்களுடன் எனது தந்தையுடன் தான் வாழ்ந்து வந்தேன். எனது தந்தை ஒருவர் தான் எங்களுக்கு, வேறொருவரும் இல்லை. அவர் இறந்த பின் எங்களின் வாழ்வாதாரத்திற்கு என்ன செய்வதென்று தெரியாமல் தவித்து கொண்டிருந்தேன். என் இரண்டு மகன்களும் பள்ளி செல்கின்றனர். நானும் குறைந்தளவே

படித்துள்ளேன். எனக்கு கிடைத்த நிவாரண உதவித்தொகையான ரூ.20 இலட்சம் தான் எங்களுக்கு சொத்து. இதை வைத்துதான் என் மகன்களின் எதிர்காலமும், அவர்களின் கல்வியின் எதிர்காலமும் உள்ளது.



நீரோடி மீனவ குடும்பத்தை சார்ந்த பயனாளி
திருமதி. மரிய கிரேட்டி அவர்கள்

சரியான நேரத்தில் தமிழ்நாடு அரசு அறிவித்த ரூ.20 இலட்சம் நிதியுதவி எங்களுக்கு கிடைத்துள்ளது. இது மிகவும் பயனள்ளதாக இருக்கிறது. இந்த நிவாரணத் தொகை வழங்கிய மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு என் சார்பாகவும், என் குடும்பத்தினர் சார்பாகவும் மனமார்ந்த நன்றியினை தெரிவித்துக்கொள்கிறேன்.

---

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், கன்னியாகுமரி மாவட்டம்.